# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.08.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 204/F/2023**

திரு.K.பாலசுப்பிரமணியம் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை ரோடு,
ஈரோடு-638001. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை-II**

இவ்வாணையம் 24.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் 05.08.2026 அன்று நேரில் ஆஜராகி விளக்கத்தினை சமர்ப்பிக்க உத்தரவிட்ட நிலையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.A.அரவிந்த்குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டலம், அவர்கள் 03.08.2026 இன்று முன்கூட்டியே ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.C.வைரவசுந்தரம், துணை மேலாளர் (நிர்வாகம்), ஈரோடு மண்டலம் அவர்களின் எழுத்துமூல விளக்கம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.P.திருவம்பலம்பிள்ளை, மேலாண் இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அளித்துள்ள எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் 6(1)ன் கீழான மனு 19.08.2022 அன்று பெறப்பட்டதாகவும் அம்மனுவில் தெரிவித்துள்ள தகவல் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவான வணிகப்பிரிவிற்கு கடிதம் மூலம் தகவல் கோரப்பட்டதாகவும் மேற்கண்ட தகவல்

அறியும் உரிமைச்சட்ட பிரிவிலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்திற்க்கு, வணிகப்பிரிவிலிருந்து 20.02.2023 தேதியன்று தகவல் பெறப்பட்டதாகவும் மேலும், அதனை தொடர்ந்து மேற்கண்ட பிரிவில் இருந்து பெறப்பட்ட தகவல்களை ஒருங்கிணைத்து பொது மேலாளரிடம் கோப்பு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் மனுதாரருக்கு 22.02.2023 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் சம்மந்தப்பட்ட பிரிவில் தகவல் பெற்று அதன் பிறகு மேலும் சில தகவல்களையும் ஒருங்கிணைத்து மனுதாரருக்கு தகவல் அனுப்பிவைக்கப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கிறது. இருப்பினும் இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள 11.08.2022 நாளிட்ட மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத சம்மந்தப்பட்ட அப்போதைய வணிகப்பிரிவு, உதவிப்பிரிவு அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டலம், ஈரோடு அவர்களுக்கு சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 02.09.2026 அன்று அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18347/F/2023 & SA 18342/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை ரோடு,
ஈரோடு-638001.

அப்போதைய உதவிப்பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை ரோடு,
ஈரோடு-638001.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை ரோடு,
ஈரோடு-638001.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை ரோடு,
ஈரோடு-638001.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.K.BALASUBRAMANIAM,
126/4, ROYAL NAGAR,
SEETHARAMPALAYAM POST,
TIRUCHENGODE-637209,
NAMAKKAL-DT.

**நகல்**
**நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
(கோவை) லிமிடெட்,
37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-6410443.

Copy to file: KR/PA